1994 ஏப்ரல் 13]

முற்பகல் *10-50*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கோடிமாரி, அமைச்சர் பதில் சொல்லிக்கொண்டிருக்கும்போது தொந்தரவு செய்யக் கூடாது. கேள்வி நேரத்தின்போது, பொதுவாக அமைச்சர்களிடம் போய் அவர்களைத் தொந்தரவு செய்யக் கூடாது என்று நான் அடிக்கடி சொல்கிறேன். நீங்கள் பதில் சொல்லிக்கொண்டு இருக்கிற அமைச்சரையே தொந்தரவு செய்கிறீர்கள்.

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே அறிவித்து இருக்கிறேன். இந்த வங்கியை எந்தப் பிரிவாகவும் பிரிக்க முடியாது என்று. 'நபார்டு நிறுவனம்' வகுத்துள்ள நெறிமுறைகளின்படி ஒரு தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி, தன்னிறைவு பெற்ற வங்கியாகத் திகழ வேண்டும். அப்படித் திகழ வேண்டுமென்றால், குறைந்தபட்சம் ஆண்டுக்கு *10* இலட்சம் ரூபாய்க்குக் குறைவு இல்லாமல், குறுகிய காலக் கடன்கள் வழங்க வேண்டுமென்று தெரிவித்து இருக்கிறது. அந்த அடிப்படையில் இந்த வங்கியைப் பொறுத்தமட்டில், *1988*-லிருந்து *1993* வரையில் *5.14* இலட்சத்துக்கு மேல் யாரும் இங்கே கடன் கேட்கவில்லை. எனவே, இந்தச் சூழ்நிலையில் புதிய ஒரு கிளையையோ அல்லது இருக்கின்ற வங்கியை இரண்டாகப் பிரிக்கின்ற நடவடிக்கைக்கோ இடமே இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *276*, டாக்டர் மு. சீனியம்மாள், இருக்கையில் இல்லை.

வினா எண் *277*, செல்வி கோ. மல்லிகா, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

277—

பரங்கிப்பேட்டை ஒன்றியம், மிதிக்குடியில் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி அமைத்தல்.

22097 — **செல்வி கோ. மல்லிகா:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரங்கிப்பேட்டை ஒன்றியம், மிதிக்குடி கிராமத்திற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) 1994-95 ஆம் நிதியாண்டில் பரங்கிப்பேட்டை ஒன்றியம், மிதிக்குடி கிராமத்திற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு மின் விசையிறைப்பான் திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் செயல்படுத்தப்படும்.

செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம், பொன்மனத் தலைவி, புரட்சித் தலைவி அவர்களின் சிறப்புமிக்க ஆட்சியில் மிதிக்குடி கிராம மக்களுக்கு முன்னுரிமை அளித்து, மின்விசை இறைப்பான் மூலம் குடிநீர் வசதிக்கென மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி அமைத்துத்தர இசைவு அளித்தமைக்கு அப்பகுதி மக்களின் சார்பில் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவிப்பதோடு, அத்திட்டத்தை இந்தக் கோடைக்காலம் முடியும் முன் நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரங்கிப்பேட்டை ஒன்றியத்தில் இருக்கின்ற மிதிக்குடி காலனி, மிதிக்குடி கிழக்கு மற்றும் மிதிக்குடி மேற்கு ஆகிய மூன்று பகுதிகளைக் கொண்டது இந்த மிதிக்குடி குடியிருப்பாகும். இதில் தற்போதைய மக்கள் தொகை முறையே 126, 385 மற்றும் 301 ஆகும். இங்கே, இந்தியா மார்க்-2 கையிறைப்பான்கள் இரண்டும், குறைந்த ஆழமுள்ள கையிறைப்பான்கள் நான்கும் நிறுவப்பட்டுள்ளன. மேலும், 1993-94 ஆம் நிதியாண்டு, டேனிடா திட்டத்தின் கீழ்போட்ட மெரோடா கையிறைப்பான் மூன்றும் நல்லமுறையில் இன்றைக்கு இயங்கி வருகின்றன. இந்த மூன்று குடியிருப்புகளுக்கும் சேர்த்து 1994-95 ஆம் ஆண்டின் திட்ட மதிப்பீட்டில் முன்னுரிமை அளிக்கப்பட்டு மின் இறைப்பான் திட்டம் நிறைவேற்றப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், வருகின்ற கோடைக்காலத்திற்கு முன்பாகவே இந்தத் திட்டம் எடுத்துக் கொள்ளப்படுமா என்று கேட்டு இருக்கிறார்கள். உடனடியாக அதற்குண்டான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1994 ஏப்ரல் 13]

செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 278, திரு.எஸ். ஆசைமணி, மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்.

278—

குத்தாலம் ஒன்றியத்தில் ஆதிதிராவிடர்களுக்கு இலவச மனைப்பட்டா வழங்குதல்.

*** 21049**—திரு. எஸ். ஆசைமணி:

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், குத்தாலம் ஒன்றியம், திருமணஞ்சேரி ஊராட்சி, அஞ்சாரு வார்த்தலை கிராமத்தில் வசிக்கும் ஆதிதிராவிடர்களுக்கு இலவச மனைப்பட்டா வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு.எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நாகப்பட்டினம்–காயிதே மில்லத் மாவட்டம், குத்தாலம் ஒன்றியம், திருமணஞ்சேரி ஊராட்சி, அஞ்சாரு வார்த்தலை கிராமத்தில் வசிக்கும் ஆதிதிராவிடர்களுக்கு இலவச மனைப்பட்டா வழங்கும் செயற்குறிப்பு எதுவும் அரசிடம் நிலுவையில் இல்லை.

திரு. எஸ். ஆசைமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குத்தாலம் ஒன்றியம், திருமணஞ்சேரி ஊராட்சியைச் சேர்ந்த அஞ்சாறு வார்த்தலை கிராமத்திற்கு நான் கேட்டு இருக்கின்ற, இந்த வினாவிலே அடங்கிய அந்த ஆதிதிராவிட பெருமக்கள் இந்தப் பகுதியிலே நீண்டகாலமாக வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். அரசிடம் மனைப்பட்டா பெறுகின்ற முறையைக்கூட அவர்கள் அறிந்து இருக்கவில்லை. எனவே, இந்தக் கேள்வியையே, கோரிக்கையாகவும், வேண்டுகோளாகவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுத்து, மீண்டும் மறுபரிசீலனை செய்து, இந்த ஆதிதிராவிடர்களுக்கு இலவச மனைப்பட்டா விரைவிலே வழங்க ஆவன செய்வாரா என அறிய விரும்புகிறேன்.